Department of Education

GOVERNMENT OF WESTERN AUSTRALIA

# மேற்கு ஆஸ்திரேலிய கல்விச் சான்றிதழ்

## பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

### WACE மற்றும் WASSA

மேற்கு ஆஸ்திரேலிய கல்விச் சான்றிதழ் (WACE) என்பது ஆஸ்திரேலிய கல்வித்தகுதி சட்டகத்தில் தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முதுநிலைச் சான்றிதழ். இரண்டாண்டு மேல்நிலைப்பள்ளிக் கல்வியை வெற்றிகரமாக முடித்த மாணவர்களுக்கும் தேவையான தரநிலையைப் பெற்றவர்களுக்கும் WACE அளிக்கப்படுகிறது. பல்கலைக்கழகங்கள், தொழில்துறை மற்றும் பிற பயிற்சி வழங்குநர்கள் WACE-யை அங்கீகரிக்கின்றனர்.

அனைத்து மாணவர்களும் 12ஆம் ஆண்டுக் கல்வி முடிவில் மேற்கு ஆஸ்திரேலிய மாணவர் சாதனையைப் (WASSA) பெறுகிறார்கள். வழக்கமாக WASSA ஒவ்வொரு பாடப்பிரிவிலும் ஒரு மாணவரின் தகுதி மற்றும் மேல்நிலைப்பள்ளியில் நிறைவுசெய்த படிப்புச் சாதனையைப் பதிவுசெய்கிறது.

### WACE தேவைகள் யாவை?

WACE பெறுவதற்கு மாணவர்களுக்குத் தேவையானவை:

1. மூன்று பாடப்பிரிவுச் சேர்மானத் தெரிவுகளில் ஒன்றை நிறைவுசெய்திருக்க வேண்டும்:
   - குறைந்தது நான்கு 12ஆம் ஆண்டு ATAR பாடப்பிரிவுகள், அல்லது
   - குறைந்தது ஐந்து 12ஆம் ஆண்டு பொதுப் பாடப்பிரிவுகள் மற்றும்/அல்லது ATAR பாடப்பிரிவுகள்,
   - சான்றிதழ் II அல்லது உயர்நிலை VET கல்வித்தகுதியை ATAR, பொது அல்லது அடிப்படைப் பாடப்பிரிவுகள் உடன் சேர்த்து முடித்திருக்க வேண்டும்.
2. எண் எழுத்து தரநிலையை வெளிக்காட்ட வேண்டும்.
3. கல்வியின் நீள அகலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.
4. சாதனை தரநிலையைப் பூர்த்திசெய்ய வேண்டும்.

### WACE கல்விக்கான தெரிவுகள் யாவை?

மாணவர்களுக்கு மூன்று கல்வித் தெரிவுகள் வழங்கப்படும். அவர்கள் அவற்றைக் கலந்து பொருத்திக் கொள்ளலாம்:

D23/0257102
February 2023

CC BY
Exclusions may apply

- ATAR, பொது, அடிப்படை மற்றும் குறிப்பிட்ட தொழில்துறைசார் VET உள்ளிட்ட WACE பாடப்பிரிவுகள்
- VET செய்நிரல்கள்
- அங்கீகாரம் பெற்ற செய்நிரல்கள்.

## எண் எழுத்து தரநிலைத் தேவைகள்

மாணவர்கள் கீழ்க்கண்ட ஏதேனும் வழியில் குறைந்தபட்ச எண் எழுத்து தரநிலைகளை வெளிக்காட்ட வேண்டும்:

- வாசிப்பு, எழுத்தில் Band 8 அல்லது அதைவிட அதிகமாகவும் மற்றும்/அல்லது 9ஆம் ஆண்டு NAPLAN-ன் எண்ணறிவுக் கூறுகள்
- இணையவழி கல்வியறிவு மற்றும் எண்ணறிவு மதிப்பீடுகளை (OLNA) வெற்றிகரமாக நிறைவுசெய்தல்


Exclusions may apply

## நீள அகலத் தேவைகள்

மாணவர்கள் குறைந்தபட்சம் 20 அலகுகள் மேல்நிலைப்பள்ளியில் முடித்திருக்க வேண்டும். இதில் அடங்குவன:

- குறைந்தபட்சம் 12ஆம் வகுப்புப் பாடங்கள் பத்து அல்லது அதற்கு இணையாக வரம்புக்குட்பட்ட VET தகுதிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட செயல்நிரல்களின் எண்ணிக்கைகள்
- ஆங்கிலப் பயிற்சிப் பாடத்திட்டத்திலிருந்து நான்கு அலகுகள், 10ஆம் ஆண்டுக்குப் பின், ஆங்கிலப் பயிற்சிப் பாடத்திட்டத்திலிருந்து 12ஆம் வகுப்புப் பாடங்களில் குறைந்தது ஒரு சோடி அடங்கியது
- பட்டியல் A-யிலிருந்து 12ஆம் வகுப்புப் பாடங்கள் இரண்டு (கலை, மொழிகள், சமூக அறிவியல்) மற்றும்
- பட்டியல் B-யிலிருந்து 12ஆம் வகுப்புப் பாடங்கள் இரண்டு (கணிதம், அறிவியல், தொழில்நுட்பம்).

## சாதனை தரநிலைத் தேவைகள்

மாணவர்கள் குறைந்தது 14 ‘C' கிரேடுகளை அல்லது அதற்கு இணையானவற்றை 11ஆம் ஆண்டு மற்றும் 12ஆம் ஆண்டுப் பாடங்களில் எட்டியிருக்க வேண்டும். இதில் 12ஆம் ஆண்டு பாடங்களில் குறைந்தது 6 ‘C' கிரேடுகள் அல்லது அதற்கு இணையானவை அடங்கும்.


D23/0257102
February 2023
Exclusions may apply